28th January 1961]

சர்க்காருக்குத் தெரியுமா? அப்படியானால் அவர்கள் மீது, நமது சர்க்காரும், மத்திய சர்க்காரும் ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொண்டார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : அதுவும் மற்றொரு பிரச்னைதான். அட்வகேட் ஜெனரல் சர்க்காருக்கு எதிராகத்தான் அப்பியர் ஆகக்கூடாது. கொள்கைக்கு விரோதமானது அல்லது நினைப்பதற்கு விரோதமானது என்பதற்காக அப்பியர் ஆகக் கூடாது என்று சொல்வதற்கு முடியாது. அட்வகேட் ஜெனரலோ அட்டார்னி ஜெனரலோ அவர்கள் பதவிக்கு வரும்முன் சர்க்காருக்கு விரோதமாகத் தான் அப்பியர் ஆகக்கூடாது என்று ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுகிறார்கள். மற்றவர்களுக்கு எதிராக அப்பியர் ஆகக்கூடாது என்று சொல்வதற்கு நமக்கு உரிமை இல்லை.

Industrial disputes

* 208 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of industrial disputes sent for adjudication and the number disposed of by the Labour Court, Madras, and by the Industrial Tribunal in the years 1958–59 and 1959–60?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement [a] is placed on the Table of the House.

SRI S. PAKKIRISAMI PILLAI : ஸார், இந்த சென்னை தொழில் கோர்ட்டிலே அநேகத் தொழில் சச்சரவுகள் இரண்டு, மூன்று வருஷ காலமாகியும் தீர்க்க முடியாமல் இருக்கின்றது. காரணம், அநேக கேஸ்கள் தொழிற் கோர்ட்டினால் தீர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, வேறு ஒரு தொழிற் கோர்ட்டு அமைப்பதற்கு சர்க்கார் முன்வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இரண்டுவித தொழில் கோர்ட்டுகள் இருக்கின்றன. ஒன்று, இண்டஸ்டிரியல் டிரிபியூனல், மற்றொன்று லேபர் கோர்ட்டு, இண்டஸ்டிரியல் ட்ரிப்யூனல்களுக்கு வேலை இல்லை. ஒவ்வொரு சமயத்தில் அதற்கு கேசேகூட இல்லாமல் இருந்தார்கள். லேபர் கோர்ட்டில் சட்டத்தினால் ஏற்படக்கூடிய சிறு விஷயங்களினால் வேலை இருக்கிறது. ஆனால் எந்த கேசும் இரண்டு மூன்று வருஷங்கள் காலதாமதம் ஏற்பட்டதாக என்னிடம் தகவலே இல்லை. எட்டு அல்லது ஒன்பது மாதம் கால தாமதமான கேஸ்கள் இருந்தால், அதைக் குறித்து சர்க்காருக்கு எழுதும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : அமைச்சர் அவர்கள் மேஜை மீது வைத்திருக்கக் கூடிய அறிக்கையில் பார்த்தால், சென்னை லேபர் கோர்ட்டிலே 1958-59-ம் ஆண்டு 26 வழக்குகள் விசாரணையில் இருப்பதாகவும், 1959-60-ம் ஆண்டு 51 கேஸ்கள் விசாரணையில்

---

[a] Printed as Appendix on page 70 infra.

[28th January 1961

இருப்பதாகவும் தெரியவருகிறது. ஆகவே இந்தக் கேள்வியில் உண்மை இருப்பதாகத் தெரிகிறது. அப்படியானால், மேலும் தொழில் கோர்ட்டுகள் ஏற்படுத்த சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லும் இன்பரன்ஸ் தவறு. நவம்பர், டிசம்பரில் 50 கேஸ்கள் வந்திருக்கும். அதனால் வருஷ இறுதியில் வருவதைக் கணக்கில் வைத்துக்கொண்டு, கேஸ்கள் நீண்ட காலமாக தேங்கி இருக்கிறது என்று சொல்ல முடியாது. ஆகவே அவர்கள் குறிப்பாக எந்த கேசாவது 6 மாத காலத்திற்கு மேல் தாமதமாக இருக்கிறது என்று தெரிவித்தால், அதுபற்றி எனக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

SRI J. MATHA GOWDER : ஸார், முதலாளிகள் தொழிலாளர்களை முதலிலேயே அதாவது ஆரம்ப காலத்திலேயே விசாரணை செய்து ஒழுங்கு செய்யப்பட்டுவிட்டது என்று காண்பித்து விட்டால், தொழிலாளர்கள் தொழில் கோர்ட்டுக்குப் போக முடியாத நிலைமையில் ஸ்டாண்டிங் ஆர்டர் இருக்கிற காரணத்தினாலே, இந்த ஸ்டாண்டிங் ஆர்டரை மாற்றுவதற்கு அரசாங்கம் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : தொழிலாளர்களின் சார்பாக ஸ்டாண்டிங் ஆர்டர் சம்பந்தமாக ஏதாவது மாறுதல் செய்ய வேண்டுமென்றால் மனுக்கள் செய்துகொள்ள சட்டத்தில் இடம் இருக்கிறது. அதன்படி அவர்கள் செய்து கொள்ளலாம்

SRI M. KALYANASUNDARAM : கனம் அமைச்சர் அவர்கள் என்னுடைய யூகம் தவறு என்று தெரிவித்தார்கள். அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய புள்ளி விவரத்திலேயிருந்து 1959-60-ல் மொத்தம் லேபர் கோர்ட்டுக்கு விடப்பட்ட கேஸ்கள் 85. முடிவு பெற்றவை 39 தான். முடிந்த வருஷத்திற்கு பாக்கி இருப்பது 51 கேஸ்கள் என்று தெரிகிறது. தவிர, இதற்கு முந்திய ஆண்டில் 66 வழக்குகள் பைசல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 66-ல் இருந்து 39-க்கு குறைந்திருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் என்னவென்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI R. VENKATARAMAN : மீண்டும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வருஷக் கடைசியில் 10, 20 பாக்கி இருந்திருக்கக் கூடும். பின்னாலே பல கேஸ்கள் புதிதாக சேர்க்கப் பட்டிருக்கும். அதனால் 51 கேஸ்கள் பாக்கி இருக்கின்றன என்று சொல்வது கூடாது என்பதை நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். அதையே மீண்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

SRI N. MARUDACHALAM : ஸார், தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்ட பிற்பாடு அவர்கள் கேஸ் போட்டு, கேஸ்கள் முடியும்வரை காத்திருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே அந்த கேஸ்கள் தீர்ப்பாகும்வரை அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு அரைச் சம்பளம் கொடுக்க உத்தரவிடப்படுமா ?

28th January 1961]

The Hon. Sri R. VENKATARAMAN: சர்க்கார் இதில் ஈடுபட முடியாது.

Sri N. K. PALANISAMI: ஸார், தொழிலாளிகளோ அல்லது தொழிற் சங்கங்களோ செய்யக்கூடிய ஆட்சேபனைகளை அமுல் செய்யாத முதலாளிகளின் மீது இண்டஸ்டிரியல் டிஸ்பியூட் ஆக்ட் செக்ஷன் 92-படி ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

The Hon. Sri R. VENKATARAMAN: Primarily that does not arise.

Sri M. KALYANASUNDARAM: இப்போது எத்தனை தொழிற் கோர்ட்டுகள் நம்முடைய மாநாணத்தில் இருக்கிறது? இன்னும் தொழிற் கோர்ட்டுகளை அதிகப்படுத்த வேண்டுமென்ற அபிப்பிராயம் ஏதாவது இருக்கிறதா?

The Hon. Sri R. VENKATARAMAN: மூன்று தொழிற் கோர்ட்டுகள் இருக்கின்றன. இப்போது தொழிற் கோர்ட்டுகளை அதிகரிக்க வேண்டுமென்ற அவசியமே இல்லை. நம் ராஜ்யத்தி லுள்ள மூன்று கோர்ட்டுகளாலும் தீர்க்கப்பட வேண்டிய கேஸ்கள் இன்னும் 51-தான் இருக்கின்றன. இந்த நிலையிலே கோர்ட்டுகளை அதிகரிக்க வேண்டியதில்லை.

Vacant lands

Mr. SPEAKER: As the hon. Member who gave notice of Q. No. 214 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

* **214 *Q.*—Sri N. R. THIAGARAJAN**: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஒவ்வொரு முனிசிபல் மேஜர் பஞ்சாயத்து நகரங்களைச் சுற்றியுள்ள காலி நிலங்களை சர்க்கார் ஆர்ஜிதம் செய்து நியாய விலைக்கு வீடுகள் கட்டுவதற்காக விநியோகிக்க திட்டமிட்டுள்ளதா?

The Hon. Sri R. VENKATARAMAN: Under the Land Acquisition and Development Scheme of the Government of India, it is proposed to acquire lands on the outskirts of important municipal towns in the State subject to availability of funds, and proposals in this regard have been called for from the Collectors concerned. In view of the limited funds available, the actual execution of the scheme is confined to Madras City for the present.

Slums

* 221 *Q.*—Sri S. PAKKIRISAMI PILLAI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of private slums in the City of Madras taken up for improvement in the Second Five-Year Plan through the Corporation of Madras; and

(*b*) the number of such slums improved in the said period?